முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 842

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.01.2022, செவ்வாய்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
   ஞானபண்டிதன் என் அருள் வடிவாக
   ஞான உலகம் படைக்க அவதாரம் எடுத்த
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் தை மாதம் 5ம் நாள், 18.01.2022 செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கரை தேடி வரும் மக்கள் மூலம்
   வையகத்தில் ஞான தீட்சை அருளியே
3. அருளியே உலக மக்களை ஞானிகளாக்கி ஞாலமதில்
   அற்புதங்கள் ஆறுமுகன் யான் நடத்துவேன்
   நடத்தவே அரங்கனுக்குள் நித்தம்நித்தம்
   ஞான சக்தியும் உலகமாற்றம் செய்ய உண்டான யோக சித்தியும்
4. சித்திபல வரமாக அருளி
   சூட்சும சக்தி ஊட்டி வருதல் காண
   காணவே அரங்கன் தொண்டரென
   கலியுகத்தில் அடையாளம் கண்ட மக்களெல்லாம்
5. ஞானவான்களாக சிறந்து
   ஞாலமதில் அரங்கன் தேடல் வழி
   அற்புதங்கள் கூடி நாட்டிடுவேன்
   உலகமாற்றம் செய்து பெரும் பேறு காண்பர்
6. காணவே இந்த அற்புதத்தை
   கரம்பட அரங்கனிடம் தீட்சை பெற்ற மக்கள் மூலம்
   ஞானயுகமாற்றமும் ஞான ஆட்சிக்காலமும் ஆறுமுகப்பெருமான் யான்
   ஞாலமதில் நடத்தி உலகமெங்கும் அமைதி தருவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–